ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஒருராஜாங்கத்தில் மேலானஉத்தியோகமும், அதனால் கௌரவமும்
ஸுகமும் கிடைக்கவேணுமென்று ஆசைகொண்டவன், ஆங்கு ஏற்படுத்தி
யுள்ள உயர்தரப்படிப்பும், வேலைசெய்யும் ஸாமர்த்தியமும், மஹாராஜா
வின் அபிமானமும் உண்டாகும்படி செய்துகொள்ளவேண்டுமென்பது
போல்-பாரதபூமியில் மனிதனாகப்பிறந்தவன், இதைவிடமேலானதேவாதி
பதவிகளும், அந்தகௌரவமும், ஸுகமும் தனக்குக்கிடைக்கவேண்டு
மென்று ஆசைகொண்டானாகில் அதற்காகவென்று பரமேசுவரனால் வேத
வாயிலாக ஆக்ஞாபிக்கப்பட்ட சிறந்த வைதிகவித்தையும், சிரத்தையுடன்
வர்ணாசிரமானுஷ்டானமும், அதனால் பரமேசுவரனது பிரஸாதமும் வித்
திக்கும்படிஸாதித்துக்கொள்ளவேண்டும். அப்படியானால் இஹத்திலும் பரத்
திலும் கீர்த்தியும் இஷ்டபூர்த்தியுமுண்டாகும். மேலானபதவியும் ஆங்காங்
குள்ள ஸுகாதிசயமும் கிடைக்கும். படிப்பும் வேலையும் சிறந்ததாயில்லா
விடினும் மஹாராஜாவின் அபிமானம் மாத்திரம் பூர்ணமாயிருக்கும்படிக்
குள்ள குணங்களிருக்குமாயின் இஷ்டத்தையெல்லாமடைந்து விடலாம்.
அதுபோல வித்தியைமுதலியவைகள் பூர்ணமாயில்லாவிடினும் பகவான்
பிரஸாதிக்கும்படிக்குள்ள குணாதிசயங்களை ஸம்பாதித்துக்கொண்டால் எல்
லாப்பயனையுமடையலாம். அவற்றுள்பக்தியென்பது சிறந்தஸாதனமாகும்.
மற்றஸாதனங்களிருப்பினுமில்லாவிடினும் பக்தியொன்றாலேயே பகவான்
பிரஸன்னராகிறார். பக்தியென்பது பகவானிடம்வைத்த ஒப்பில்லாவன்
பாகும். பக்தியின்மஹிமை பலவாறாக பாகவதாதி சாஸ்திரங்களில் கூறப்
பட்டிருக்கிறது. பக்தர்கள், பக்தியின்வலிமையாலடைந்த பலன்களையும்
விஸ்தாரமாக புராணங்கள் நிரூபிக்கின்றன. அங்ஙனம் நிரூபிப்பது கதை
கேட்டு காலங்கழிப்பதற்காகஇல்லை. ஆனால் அந்தபக்தர்களை திருஷ்டாந்த
மாகக்கொண்டு அவர்கள்போல்நடந்து நாமும் அந்தசிரேயஸ்ஸை அடைய
வேண்டுமென்பதற்காகவே பக்தசரித்திரங்களை புராணாதிகள் பிரகாசப்
படுத்துகின்றன. தற்காலத்தில் சிலமேதாவிகள் அந்தபக்தசரித்திரங்களை
விபரீதகாரியம்செய்வதற்குஉதாரணமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். வித
வாவிவாஹத்திற்கு சிலசரித்திரங்கள், பிரௌடாவிவாஹத்திற்கு சிலசரித்
திரங்கள் உதாரணமாக ஆபாஸமாய்தோன்றுகின்றன. அவைகளுக்குமுன்
பின்னுள்ள பிரகரணங்களைக்கவனித்தால் அந்தசரித்திரங்கள் இந்தகெட்
டகாரியங்களுக்கு உதாரணமாக ஆகவேமாட்டாது. பாலிகாவிவாஹத்
தைப்புகழ்ந்து கூறும்பல சரித்திரங்களிருப்பது அவர்கள்பார்வையில்படு
வதில்லைபோலும். அவ்விதமாக விபரீதகாரியத்திற்குக்காரணமாக அவை
களை யெடுத்துக்கொள்ளாமல் நல்லமார்க்கத்திற்காக எடுத்துக்கொண்டு
அதன்படி பகவானிடம்பக்திசெய்து அவரதுபிரஸாதம் பெற்று பிரஹ்லா
தாதிகள்போல் பரமசிரேயஸ்ஸை யாவருமடைவார்களாக. சுபம்!

ப—ர்.

ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ ஆனி-௴ ௧௪௨

பிரஹ்லாதசரித்திரம்.

பக்தியோகம்.

ஹிரண்யகசிபு ஆக்ஞை செய்தனுப்பிய பிரகாரம் சுக்கிராசாரியார் தனது புத்திரர்களான, சண்டன், அமர்க்கன் இவர்களைப் படிப்பிவிக்கும்படி ஏற்பாடு செய்தார். அவர்கள் மிகக்கவலையுடன் படிப்பிவித்தும் பயன்படாதபோது பிரஹ்லாதனை தங்கள் கிரஹத்தில் அழைத்துச் சென்று, இனிமையான சொற்களால் அவனைப் புகழ்ந்து பேசி— "குழந்தாய்! பிரஹ்லாத!! உனக்கும் நமக்கும் க்ஷேமமுண்டாகட்டும்; உண்மையைச் சொல்; பொய் சொல்லாதே. இங்கு எவ்வளவோ அஸுரபாலகர்கள் படிக்கவில்லையா? அவர்களுக்கெல்லாமில்லாததான புத்திமாராட்டமுனக்கெப்படி வந்தது? நாங்களொன்று போதிக்கின்றோம், உன் பிதாவின் எதிரில் நீ வேறு விதம் சொல்லுகிறாய். அதனால் உன் பிதாவுக்கு 'விஷ்ணுபக்ஷத்தைச் சேர்ந்தவர்களிவர்கள்' என்று எங்களிடம் சங்கையடையும்படிக்கும் பாலகனுடைய புத்தி வேறுபடாமல் ஜாக்கிரதையாய் கல்வி கற்பிவிக்கவேணுமென்று கண்டிப்பாக கட்டளையிடும்படிக்கும் நேர்ந்துவிட்டதே: இவ்விதமாக உனக்கு புத்திகலைந்தது ஸ்வபாவத்தாலேயா? அல்லது அன்னியர்களால் ஏற்பட்டதா? இதைக் கேழ்க்கவேணுமென்று பிரியப்பட்ட எங்களுக்குச் சொல்லப்பா? என்று கேழ்க்கும்போது பிரஹ்லாதன்— "தானென்றும் பிறனென்றுமுள்ள பேதபுத்தி புத்திமோஹத்தையடைந்தவர்களுக்கல்லவா ஏற்படும். இவன் வேறு, நான் வேறு என்ற புத்திப்ரமமுள்ளவர்களைப் பசுக்களென்றல்லவா சுருதி கூறுகின்றது. பகவானுடைய மாயாசக்தி ஆச்சரியகரமானதுதான். அதைக்கூட ஸ்வாதீனம் செய்துகொண்ட பகவான் சர்வசக்திநிறைந்தவனென்பதில் ஸந்தேகமில்லை. எந்த பகவானது மாயையால் மோஹத்தையடைந்த ப்ரம்மாதிகளுக்கும்

நானென்றும் அன்னியனென்றும் பேதபுத்தி விலக்கமுடியாததாக இருக்கின்றதோ! எந்த பகவானை அடையும் வழியைப்பற்றி வேதவாதிகளும் மயங்குகின்றார்களோ! அந்த பகவான் தான் என்னுடைய புத்தியைக்கலைத்திருக்கிறார். காந்தத்தின் எதிரில் இரும்பு அசைவது போல் ஸ்ரீபகவானது பிரேரணையால் எனது புத்தி கலைகிறது" என்று கூறினான். இதைக் கேட்டதும் பிரபு ஸேவையைப் பெரிதாக நினைத்தவரான ஆசிரியரும் கோபங்கொண்டு வேறு பையன்களைப் பார்த்து— "அடா! பிரம்பைக் கொண்டுவாருங்கள். "போதனாசக்தியுள்ளவர்கள் என்ற நமது கீர்த்தியை நசிப்பித்து அபகீர்த்தியைப் பரவச் செய்கிறான். தனது குலத்திற்கும் கட்டைத்தணலாய்த்தோன்றின இந்த துர்புத்தி பிடித்த பிரஹ்லாதனுக்கு தண்டோபாயந்தானிப்பொழுது தகுதியானது. அஸுர வம்சமென்னும் சந்தனவனத்தில் இவன் முள் மரம்போலல்லவா கிளம்பியிருக்கிறான். இவன் மூலமாக அஸுரவம்சமே அடியோடு நசித்துவிடும்போலிருக்கிறது." என்பதாதியாக கடுஞ்சொற்களாலதட்டி பற்பல உபாயங்களால் பயமுருத்தி ராஜாக்ஞைபோல் படிப்பித்தார். ஹிரண்யகசிபுவின் மனம்போல பிரஹ்லாதன் படித்துவிட்டான். அவரிடமழைத்துச்சென்று பரீக்ஷை செய்யச் சொல்லி ஸம்மானம் பெறவேண்டுமென்று கருதி ஆசிரியர் பிரஹ்லாதனை அழைத்துச் செல்ல, அன்னை கண்டு அலங்கரித்துவிட,குழந்தை தகப்பனிடம் சென்று பாதங்களில் நமஸ்கரித்து நிற்க, ஹிரண்யகசிபு குழந்தையையெடுத்து, இருகரங்களாலுமணைத்து, ஆசீர்வதித்துக்கொண்டாடி, மடிமேல் வைத்து, முத்தமிட்டு, உச்சிமுகர்ந்து, ஆனந்தக்கண்ணீர்பெருக, ஸந்தோஷத்துடன்— 'ஹே! பிரஹ்லாத!! இவ்வளவு நாளாக குருகுலத்திலிருந்து நீ அப்பியஸித்ததற்குள் சிறந்ததோர் பாகத்தைச் சொல்" என்று கேழ்க்க, பிரஹ்லாதன்— "பகவானுடைய திவ்யகுணங்களைக் கேட்பதும், பக்தர்களிடம் சொல்லுவதும், பகவத்ஸ்வரூபத்தை ஸ்மரிப்பதும்,பாதாரவிந்தத்தை ஸேவிப்பதும், பூஜிப்பதும், நமஸ்கரிப்பதும், தாஸனென்று பாவிப்பதும், ஸக்கியம் (ஸ்நேஹம்) பாராட்டுதலும், ஆத்தும ஸமர்ப்பணமும், ஆகிய ஒன்பதுவிதமான பக்தியை பகவானிடத்தில் செலுத்துவதே அப்பியஸித்ததிற்சிறந்த பாகம்" என்று நவவிதபக்தியைப் பற்றி பெரியதோர் உபங்யாஸம் செய்தார். பக்தியைப் பலவா

றாகப் பிரித்திருக்கிறார்கள் அவற்றுள் இதோர் பிரிவினையாம். இதில் கீழிருந்து மேலேறுவதற்குப்படிக்கட்டுபோல் இந்த ஒன்பது பிரகாரங்களுமாகும். அதாவது முதலில் பூர்வ புண்ணிய வசத்தால் பெரியோர்கள் ஸந்நிதி சென்று வணங்கி, இருகரங் கூப்பி நின்று அவர்கள் உபதேசிக்க, பகவத்குணங்களைக் கேழ்ப்பது முதலாவதாகும். இங்ஙனம் பலதடவை அனேக ஆசாரியர்களிடம் கேட்டுக்கேட்டு பகவத்குணங்கள் யாவும் மனதில் திடமாக நிலைக்கும்பொழுது பகவத்குணங்களில் அன்பும், ரோமாஞ்சமும், ஆனந்தக் கண்ணீரும் ஸ்வபாவமாகவே உண்டாகும். இவ்வாறு மனதில் நிறைந்த பகவத்குணங்கள் உள்ளடங்காதவைபோல் தானாகவே வாக்கிலிருந்து வெளிப்படுவதுகீர்த்தனமாகும். பகவத்குணங்களைப் பூர்ணமாகக் கேட்டவர்களது வாக்கு அவைகளை வெளியிடாமலிருக்காது. இது சிரவணமென்ற முதலாவது பக்தியைவிட சிறந்ததாகும். பகவத்குணங்களைக்கீர்த்தனம் செய்தால் தனக்கு அடுத்தபடியிலேறுவதற்குக் காரணமாவதுடன் இதைக் கேழ்க்கும் பாக்கியம்பெற்றவர்களுக்கு யோக்கியதையையுண்டாக்கும். இந்தக்கீர்த்தனம் அதிகமாகச் செய்யப்பட்டால் வாக்கெனப்படும் இந்திரியத்தின் ஸ்தானங்களுக்குச்சிரமத்தைக் கொடுக்கும். அன்றியும் மனது, வாக்கு என்ற இரண்டு இந்திரியங்கள் கீர்த்தனத்தில் அபேக்ஷிக்கப்படுகின்றன. ஆகவே மனதென்ற ஒரே இந்திரியத்தால் ஸாதிக்கக்கூடிய ஸ்மரணமென்ற மூன்றாவது சிறந்ததாம். மனது ஏகாக்ரப்பட்டு அடங்கிநிற்காதபோது பாதஸேவை, அர்ச்சனம், வந்தனம் இவைகள் கீழ்மூன்று படிகளைத் திடப்படுத்துவதற்குக் காரணமாகின்றன. ஆகவே அவைகளைவிடச்சிறந்தனவாம். இவைகளால் மனது வெளிப்படாமல் எப்பொழுதுமே பகவானிடத்திலீடுபட்டு நிற்பது, ஒரு பிரபுவினிடத்தில் ஊழியன்ஈடுபடுவதுபோலாகும். இது தாஸ்யமெனப்படும்கீழ்க்கூறப்பட்ட ஆறுவிதங்களைவிட சிறந்ததாம். அதைவிடச்சிறந்ததாம் ஸக்கியமென்பது. தாஸனைவிட ஸ்னேஹிதன் மேல்பட்டவனல்லவா! தாஸன் பிரபுவைவிட தாழ்ந்தவனாவன். ஸ்னேகிதன் ஸமமான அந்தஸ்துள்ளவன். ஆகையால் தாஸ்யத்தைவிட ஸக்கியம்சிறந்ததென்பது ஸித்திக்கின்றது. ஸக்கியத்தைவிட ஆத்துமநிவேதனம் சிறந்ததாகும். ஏனெனில், அவ்வெட்டு பிரகாரங்களிலும் பக்தனுக்கும் பகவானுக்கும்பேதம்தோன்றுகின்றது.

ஒன்பதாவது பிரகாரத்திலோவெனில் பேதம் தோன்றுவதில்லை. ஆகையால் ஸக்கியத்தைவிட ஆத்மநிவேதனம் என்ற பிரகாரம் சிறந்ததே. வேறிடத்தில்—

"तस्यैवाहं ममैवासौ स एवाहमिति त्रिधा"

"நான் பகவானைச் சேர்ந்தவன், என்னைச் சேர்ந்தவர் பகவான், நானே பகவான், பகவானே நான் என பக்தி மூவகைப்பட்டதாகும்"

என்று பக்தி மூன்றுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதில் தாஸ்யமென்பது வரையுள்ள ஏழு பிரகாரங்கள் "நான் பகவானைச் சேர்ந்தவன்" என்பதின் பிரிவுகளாகும். எட்டாவது ஸக்கியமென்பது "என்னைச்சேர்ந்தவர் பகவான்" என்பதாகும் ஒன்பதாவது மூன்றாவதாகும். இவ்வாறாக வெவ்வேறுபட்ட பக்தியின் பிரிவுகளை உசிதம்போல் இவ்வொன்பதில் அடங்கினதாகக்கண்டு கொள்க. இவ்வாறு பக்தசிரோமணியான பிரஹ்லாதனால் கூறப்பட்ட பக்தியின் பிரிவுகளில் எல்லாவற்றிலுமாவது, அல்லது ஸம்பவித்த வரையிலுமாவது ஸத்குருவின் கிருபையால் ஈடுபட்டு பகவானது பரிபூர்ணப் பிரஸாதத்திற்குப் பாத்திரமானால் ஸகல சிரேயஸ்ஸையுமடையலாம். இதனால் பிரஹ்லாதனுக்குச் சுக்கிராசாரியார் முதலியவர்கள் ஸாமதான பேததண்டமெனப்படும் நான்குவித உபாயங்களால் அவனுக்குப் பால்யத்தில் படிந்ததற்கு விபரீதமாக எவ்வளவு தடவை உபதேசித்தபோதிலும் அது பயன்படவே இல்லையென்றேற்பட்டதல்லவா? அதுபோலவே நமது ஆர்யச்சிறுவர்களுக்கு முன்காலத்தில் நல்லொழுக்கம் பழகும்படி தாய்தந்தையர்கள் பிறந்தது முதற்கொண்டே பாடுபட்டுவந்தார்கள். தற்காலத்திலோவெனில் பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் சீர்கேடான நடத்தை பழகும்படி பாடுபடுகிறார்கள். அதனால் சிறுவர்களது மதிமயங்கி துராசாரத்திலீடுபட்டு, பெற்றோரிடத்திலும் மற்ற பெரியோரிடத்திலும் மரியாதையில்லாததாக ஆய்விடுகின்றது. பால்யத்தில் படிந்த துராசாரம் முதலியவைகளை எவ்வளவு சிரமப்பட்டு மாற்ற முயற்சித்தபோதிலும் அது பயன்படுகிறதேயில்லை. அதனால் சிறுவர் நம் முன்னோர்களுக்கு உலகநடவடிக்கையே தெரியாதென்றும், குருட்டுத்தனமாக ஏதோ சில பழைய கதைகளைச் சொல்லிக்கொண்டு திரிகிறார்களென்றும்,

சுயநலத்தையே பாராட்டி நடக்கிறார்களென்றும், பலவிதமான பழிகளைப் பெரியோரிடம் சுமத்துகிறார்கள். பெரியோர்களுமிவர்களை எதிரியாக பாவிக்காமல் உபேக்ஷை செய்திருப்பதால் ஆத்தும சிலாகையும் அன்னிய நிந்தையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இனிமேலாவது பெற்றோர்கள் விழித்துக்கொண்டு சிறுவர்களது மனது நல்வழியிற் செல்லுமாறு செய்வார்களாக.

சுபம் !

ப—ர்.

பரோபகாரம் பெரியதர்மம்.

தனவான் தானம் செய்யவேண்டும். வித்துவான் வித்யோபதேசம் செய்யவேண்டும். இவ்வாறு ஸர்வ பிராணிகளும் தன் தன்னிடமுள்ளதைப் பிறருக்குபயோகப்படும்படி உபகரிக்கவேணும். அப்படி உபகரிக்காவிடில் பின்னிட்டுப் பெரிய கெடுதலை விளைவிக்கும். இங்கோர் புராதன இதிஹாஸமுண்டு. ஜயபுரமென்னும் கிராமத்தில் ஜயராமனென்று பெயருள்ள ஓர் பிராம்மணனிருந்தான். அவன் கிரமமாய் கிரஹஸ்தாசிரமத்தை ஸ்வீகரித்து ஸ்வகர்மானுஷ்டானம் செய்துவருகையில் குடும்பத்தை போஷிப்பதற்குப் போதுமான தனம் தனக்குரிய ஜீவனோபாயத்தால் ஸ்வதேசத்தில்கிடைக்காததுபற்றித்தேசாந்தரம்சென்று ஸம்பாதித்து அனுப்புவதாகக் குடும்பத்தாரிடம் சொல்லி அவர்களை கிரஹத்திலேயே வைத்துவிட்டு ஸ்வர்ணநிதி என்னும் கிராமஞ்சென்று ஸ்வதர்மத்தை முறைவழுவாமலனுஷ்டித்து தனக்கு விஹிதமான யாஜநம் (யாகம் செய்வித்தல்) முதலிய உபாயத்தால் நிரம்பதனம் ஸம்பாதித்துக் குடும்பத்தாருக்கனுப்பிவந்தான். அப்படி அனுப்பி வரும் தனங்களை குடும்பத்திலுள்ள தாயார், பாரியை முதலியவர்கள் அதிதிஸத்காரம் முதலிய தர்மகாரியத்தில் செலவிட்டுக்கொண்டுவந்தார்கள். சிறிதுகாலமிந்தப்பிரகாரமாகச் செல்லவே, ஜயராமன் தான் ஸம்பாதித்தனுப்பியது இவ்வளவு காலத்திற்கு வேண்டிய குடும்பச்செலவுபோக சற்றேறக்குறைய ஐம்பதினாயிரம் ரூபாய் பாக்கி இருக்கலாம். அதைக்கொண்டு இனிமேல் ஸ…கமாய் காலக்ஷேபம் செய்யலாமென்று நினைத்துத் தன்னுடைய கிராமத்தை நோக்கிவருகையில் இவனது கிரஹத்தில் அறுசுவை

யுடன் கூடி அமிருதம்போன்ற அன்னத்தை வயிராரப்புசித்தவர்
கள் இவனை வழியில் கண்டு வாயாரஸ்துதிசெய்ய செவியாரக்
கேட்டு, மனமாரக்களித்து கிரஹம்வந்துசேர்ந்து பாரியைமுதலிய
வர்களாலுபசரிக்கப்பட்டு நித்தியகர்மத்தை முடித்துப் புசித்துக்
களைப்பாறி மீதியுள்ள பணத்தின் கணக்கைக்கேழ்க்க "ஒன்றும்
பாக்கி இல்லை, தாங்களனுப்பியதெல்லாம் தர்மகாரியத்தில் செல
வழிந்துவிட்டது. கடைக்காரனுக்கு இன்னும் கொஞ்சம் பாக்கி
கடன் கொடுக்கவேண்டும்" என்றுரைத்ததைக்கேட்டு மனம்
நொந்து "அடடா! என்ன கதை? என்ன செய்வேன்? யாரிடம்
சொல்லுவேன்" என்று பரிதபித்து அன்னையை நோக்கி 'அம்மா!
என்ன தர்மம் செய்தீர்கள்? நான் தேசாந்தரத்தில் சிரமப்பட்டு
ஸம்பாதித்ததை இப்படி அழித்துவிட்டீர்களே? நான் தேசாந்திரம்
போனதும் பணம் சம்பாதித்தும் வீணாயல்லவா ஆய்விட்டது.
இப்படிச் செய்யலாமா? என்று கேழ்க்கும்போது, தர்மகாரியத்
தில் சிலவழிந்தது ஒருக்காலும் வீண்போகாது. பணத்தைத்
தேடிப் புதைத்துவைத்தாலும் குடியன், தடியன், வெறியன்
முதலியவர்களுக்கு உபயோகப்படும்படி தெருவிலிறைத்தாலும்
வீணாகுமேயன்றி தர்மகாரியத்திலுபயோகப்பட்டது பயனில்லா
மற்போகமாட்டாது. ஒன்றுக்கு அனேகமாய்த் திரும்பக்கிடைக்
கும், இப்படி தர்மதத்துவம் தெரிந்தவர்களின் கூற்று. வேண்டு
மானால் பெரியோர்களை விசாரித்துப்பார்" என்று சொல்லவே தற்
காலம் தான் கொண்டுவந்த பணத்திலிருந்து கடைக்காரன் கட
னைக்கொடுத்துவிட்டு பாக்கியுள்ளதை வீட்டுச்சிலவுக்காகவும்
கொடுத்து தர்மதத்துவத்தை விசாரிக்கப்புறப்பட்டான். இங்
ஙனம் வீட்டைவிட்டு தர்மத்தை விசாரிக்கப்புறப்பட்ட ஜயாமன்
தேசதேசாந்திரம் கடந்து ஸூரியாதபத்தால் பரிதபித்து தீர்த்தம்
கூடக்கிடைக்காமல் தயங்கி நடக்கும்போது கொஞ்சதூரத்தில்
நன்றாகச்செழித்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து நிற்கும் கட்டி
மாமரமொன்றைக்கண்டு, இதன் பழத்தையாவது பரித்துத்தின்று
பசியாறி தாஹசாந்தியடைவோமென்றெண்ணி அந்த மரத்தினரு
கில் சென்று ஒரு பழத்தைப்பரித்து நறுக்கவே உள்முழுமையும்
புழுவாயிருக்கக்கண்டு அதையெறிந்துவிட்டு மற்றோர் பழத்தைப்
பார்க்கும்போது அதுவுமிப்படியிருக்க இவ்வாறு அனேகம் பழங்
களைப் பரித்துப்பரித்து முற்றிலும் புழுவாகவேயிருக்கக்கண்டு

வருத்தப்பட்டு "அடாடா கட்டிமாமாமே! பார்வைக்கு அழகாகப் பழுத்து நிற்கின்றாய், ஒரு பழமாவது உட்கொள்ள உபயோகப் படவில்லையே, வழிநடப்பவர்கள் வந்து ஏமாந்துபோகிறார்களே" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அப்பொழுது அந்த மாம் "ஓ ஸ்வாமி! தாங்கள் யார்? என்ன பச்சாத்தாபப்படுகிறீர்கள்" என்று வினவ "தேடின ஸொத்தை அனுபவிக்க பாக்கியம் செய்யாத பாபி நான். ஆனால் என் ஸொத்து அன்னியருக்காவது உபயோகப்பட்டது. பிறருக்குக்கூட உபயோகப்படாத பழங்களைப் படைத்த மஹாபாபியான உன்னிடம் வந்தேனே, பாபகதியையும் தர்மதத்துவத்தையும் தெரிந்துகொள்ளப் பெரியோரிடம் செல்லுகிறேன்" என்று ஜயராமன் சொல்லவே ஸ்வாமீ! என்னுடைய பாபத்தையும்பற்றி தாங்கள் விசாரித்துவரவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டது. அப்படியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டு ஜயராமன் கொஞ்சதூரம் செல்லும்பொழுது கோரமான காடொன்று தென்பட்டது. அனேகமரங்களடர்ந்த அக்கானகத்தின் நடுவிற்செல்லுகையில் பூமியில் முகமும் இரண்டு மரங்களின் கிளைகளினிடையே உடலும் மற்றோர்புறம் வாலுமாகக் கிடக்கும் பெரியதோர் மலைப்பாம்பு காணப்பட்டது. அந்தப்பாம்பு மாக்கிளைகளின்மீதிருக்கும் தன்னுடலின்கீழ் வரும் பிராணிகளை அவற்றின்மேல் வீழ்த்தப்பட்ட தன்னுடலால் அமுக்கிக்கொண்டு தின்றுவிடுவது வழக்கம். ஜயராமன்மீது மலைப்பாம்பினது உடலின் கீழ்ச்செல்லுகையில் அந்த உடல் ஒருபார்சுவமாக ஜயராமன் மீது விழவே அதினின்று நழுவிக்கொண்டு ஜயராமன் ஓடத்தொடங்கினான்.

அப்பொழுது மலைப்பாம்பு அவனை நோக்கி—"என் சமீபத்தில் வருகின்ற பிராணியைத் தின்று ஜீவிக்கும்படி கடவுளிட்ட கட்டளைப் பிரகாரம் ஜீவித்துவரும் என்னருகாமையில் வந்து நீர் ஓடுவது நியாயமில்லை" என்று கூறவே—"பாபத்தின் பயனையும் தர்மத்தின் தத்துவத்தையும் பெரியோரிடம் விசாரிக்கப் புறப்பட்டிருக்கிறேன். அதனை விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகு உனக்கிரையாய் வந்துவிடுகிறேன். அதுவரை பொறுத்திருப்பாயாக" என்று சொல்லிவிட்டு ஜயராமன் புறப்படும்பொழுது—"ஸ்வாமீ! என்னுடைய பாபகதியையும் விசாரித்துவரவேண்டு', மென்று பாம்பு வேண்டிக்கொள்ளவே அப்படியே ஆகட்டு

மென்று ஜயராமன் வெகுதூரம் போனான். ஸூரியன் அஸ்தமயத்தையடைய ஒரு நாழிகையிருந்தது. "கோரமான கானகத்தின் மத்தியில் வந்துவிட்டேன். இதைவிட்டு வெளிப்படப் பொழுதும் போதாதே. ஸூர்யாஸ்தமனமாய்விட்டால் புலிகாடிவருவதும்தெரியாதே. அவைகள் வந்து என்னைத் தின்றுவிடப்போகின்றதே. ஈசுவா! என் குலதெய்வமே!! நான் என்னசெய்வேன். ஒன்றும் தோன்றவில்லையே. தர்மாணத்தையு மடையும்படியாகவா பாபம்செய்திருக்கிறேன். அந்தோ! கஷ்டம்" என்று ஜயராமன் வாய்விட்டலரும்போது, அதைக்கேட்ட அந்தக்காட்டில்வசிக்கும் வேடனொருவன் கிட்டவந்து ப்ராமணனாயிருக்கக்கண்டு "ஓ! ஸ்வாமி! தாங்கள் யார்? எங்கிருந்து எதற்காக எங்குபோகின்றீர்கள் எதற்காகவாய்விட்டலருகிறீர்கள்?" என்று கருணையுடன் கேழ்க்கஜயராமன் தன் வரலாற்றைக்கூறி இரவில்தன்னை இரக்ஷிக்கும்படி கேட்டுக்கொண்டான். அந்தவேடனும் அவரதுவேண்டுகோளுக்கிணங்கி அவரைத் தன்வாஸஸ்தானம்கொண்டுவந்துசேர்த்தான். அங்கு அந்தவேடன் இரவில் புலி, காடி, முதலிய துஷ்டஜந்துக்களுக்காக பயந்து பெண்டுபிள்ளைகளைக்காப்பாற்றுவதற்காக நான்கு கால்நிறுத்தி அதன்மேல் காட்டுமரங்களாலும் மூங்கில்களாலுமோர்பரண்கட்டி ஸூர்யாஸ்தமயமானால் அதன்மீது பெண்டுபிள்ளைகளுடன் ஏறிவிடுவான். பரண்மீதுள்ள இவர்களை துஷ்டஜந்துக்கள் ஒன்றும்செய்யமுடியாது. அவ்விதமான பந்தோபஸ்துள்ள தன்னிருப்பிடம் ஜயராமனையழைத்துப்போய் ஸ்நானத்திற்கிடங்காட்டி ஜயராமன் ஸ்நானம் நித்தியகர்மானுஷ்டானம் முதலியவைகளைச்செய்துமுடிக்கவே அந்தவேடன் ஏற்கனவே தான் சேகரித்துவைத்திருந்த தினைதான்யம், தேன், இவைகளைக்கொண்டுவந்து அதைப்பாகம்செய்துபுசிக்கும்படிபிரார்த்தித்துக்கொள்ள அப்படியே ஜயராமனும் சீக்கிரமாகச்செய்துகொண்டுபரண்மீது ஏறிவிட்டான். வேடன் பரண்மீது இடமில்லாமையாலும், பரண்கீழிருந்து காடி புலி வாராமல் காத்திருப்போமெனக்கருதினபடியாலும் பரண்கீழ் அம்பு வில்லுமுதலியவைகளைவைத்துக்கொண்டு ஜாக்கிரதையாகக் காத்துக்கொண்டிருந்தான். அவனது பெண்டுபிள்ளைகள் பரண்மீதோர்புறமாகப் படுத்துக்கொண்டார்கள். ஜயராமனும்மற்றோர்புறமாக ஒடுங்கிப்படுத்தவுடனே சிரமத்தால் தூங்கிவிட்டான். வேடன் எவ்வளவுஜாக்கிர

தையாயிருந்தும் தைவவசத்தால் புலியால் விழுங்கப்பட்டான். ஜயாமன் காலையிலெழுந்து பார்க்கவே வேடனைக்கிழேகாணுமலி ரங்கிப்பார்க்கும்போது சில அடையாளங்களால் துஷ்டமிருகத் தால் கொல்லப்பட்டிருக்கவேணுமென்று அறிந்து வியஸநிக்கும் போது வேடனது பெண்டுபிள்ளைகள் இதையறிந்து கண்ணும் கண்ணீருமாகக் கதரியழுகையில் ஜயாமன் அவர்களை ஸமாதா னப்படுத்தித்தான் போய்வருகிறவரை அவ்விடத்திலேயே ஜாக்கி ரதையாக இருக்கும்படி சொல்லிவிட்டுப் போகும்பொழுது “ஐயோ! நான் மஹாபாபியாய்விட்டேன், கானகத்தில் கதியற்றுக் கதரிக்கொண்டிருந்த எனக்கு அபயந்தந்து பசியாற்றிக் கிளைப் பாற்றியுபசரித்த பரமோபகாரியான வேடன் எனது தௌர்பாக் கியத்தால் மரித்துவிட்டான். அவன் பெண்டு பிள்ளைகள் பரி தபிக்கின்றன. இத்தகைய மஹாபாபியான என் கண்முன்னே எந்தப் பெரியார் தென்படப்போகிறார்? நான் தர்மதத்துவம் தெரிந்துகொள்வதெங்கே? பரமேச்வா! கங்காதா! கருணைக்கடலே முப்புரத்தையெரித்தவனே! காலனைக்காலாலுதைத்தவனே! காம னைக்கண்ணாலெரித்தவனே! அம்புலியைப்பணியாய்ச்சூடியவனே! எப்படியாவது எனக்கு தரிசனம் கொடுத்து எனது கொடிய பாபங்களையகற்றி என்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்வாயாக” என் றிவ்வாறு பரமேசுவரனைப் பிரார்த்திக்க மனமுருகித் போற்று கின்ற ஜயாமனுக்கு பார்வதிகாந்தன் விருஷபாரூடராக தரிசனம் கொடுத்து குழந்தாய்! ஜயாம! வருத்தப்படாதே. உன்னிடம் யாதொரு பாபமில்லை என்று அனுக்கிரஹித்தார்.

(இன்னும் வரும்.)

ப—ர்.

ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷித சரிதம்.

(320-வது பக்கத்தொடர்ச்சி.)

38. தொட்டாசாரியாரின் வரலாறு.

ஸ்ரீகாஞ்சி நகரின் அருகாமையிலுள்ள சோளசிங்கபுரத்தில் வஸித்துவந்த மஹாச்சாரியார் என்று நாமம் பூண்ட தொட்டாச் சாரியார் என்ற தென்கலை வைஷ்ணவர் தீக்ஷிதர்களோடு வாக்கி யார்த்தம் சொல்லும்போது வடகலை ஸம்பிரதாயம் தெரியாமல்

வாதம் புகுகிறீர் என்று அவரை தீக்ஷிதாள் சொன்னார். பிறகு அவர் சததூஷணீ சண்டமாருதம் முதலான தேசிக கிரந்தங்களை பராமர்சம் செய்து ஹயக்ரீவோபாஸனத்தால் தீக்ஷிதாளோடு வாதம் பண்ணி தீக்ஷிதாளின் வார்த்தையால் வடகலையானார். இவர் தீக்ஷிதாளால் செய்யப்பட்ட ந்யாயரக்ஷாமணி என்கிற அத்வைத கிரந்தத்திற்கு பாராசர்யவிஜயம் என்று கண்டனம் எழுதியிருக்கிறார். அதற்கு கண்டனம், தற்காலத்தில் மஹாமஹோபாத்தியாயரான ஸ்ரீ அநந்தகிருஷ்ண சாஸ்திரிகளால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

39. விஜயீந்திர ஸ்வாமிகள்.

ஸுமதீந்திர பீடாதிபதிகளான இவர்கள் தீக்ஷிதாளிடம் விசுவாஸமுள்ளவர். இப்போது அப்பீடம் நெஞ்சங்கோட்டில் இருக்கிறது. அவர்கள் நாராயணபூதம் என்ற மந்திரத்தை ஸித்தி பெற்று அதனால் வெகு கார்யங்களை ஸாதித்தவர்கள். தீக்ஷிதாளின் 104 கிரந்தக்களுக்கும் பிரதி கிரந்தங்கள் இயற்றியிருக்கின்றார். 64 கலைகளிலும் வல்லவர். ஸர்வதந்திர ஸ்வதந்திரர். அடியில் கண்ட சுலோகத்தால் இக்கருத்து தெரிகிறது.

चातुर्यैकाकृतिर्यः चतुरधिकशतग्रन्थरत्नप्रणेता
धूताराातिप्रबन्धः स्फुटविदितचतुष्षष्टिविद्याविशेषः ।
सोयं नः श्रीसुरेन्द्रः यतिवरतनयोऽद्वैतशैवासहिष्णुः
पुष्णातु श्रीजयीन्द्रः त्रिभुवनविदितः सर्वतन्त्रस्वतन्त्रः ॥

ஒரு சமயம்,

अश्वत्थरण्यं तरण्यंघ्रिसरण्यन्यन्ताधिपादपम् ।

என்று தீக்ஷிதாள் ண்யு என்று 3 பிராஸத்தோடு சொன்னபோது-

விஜயீந்திரர் झरीदत्तपरीरम्भदरीसुप्तसरीसृपम् । என்று, री என்ற 4 பிராஸத்தோடு சொன்னார் என்று அவருக்கு மேன்மையை சிலர் கருதுகின்றனர். தீக்ஷிதாளின் பூர்வார்த்தத்தில் ஒரு பிராஸம் குறைந்திருந்தாலும், கர்த்தா- கிரியை- விசேஷணம், என்று மூன்று சேர்ந்து வாக்கியத்தின் அன்வயமிருக்கிறது. உத்திரார்த்தத்திலோ விசேஷணம் ஒன்றுமட்டுமே இருக்கிறது. அதுவும்பூர்வார்த்தத்தோடேயேசேர்ந்து அன்வயிக்கவேண்டியிருக்கிறது

ஒரு சமயம் தண்டி என்ற கவி, காளிதாஸனைத் தேடிக்கொண்டு ஒருவேசியின் இல்லத்தில், அவனைக்கண்டான். அத்தருணத்தில் காளிதாஸன் அவ்வேசியைப் பார்த்து

तूर्णमानीयतां चूर्णं पूर्णचन्द्रनिभानने ।

என்றான். அப்போது தண்டிகவி,

पर्णानि स्वर्णवर्णानि कर्णान्तायतलोचने ।

என்றான். உடனே கவித் திறமை வாய்ந்த அவ்வேசி,

कालिदासाय कवये दण्डिने पण्डिताय च ।

என்றாள். காளிதாஸனுடைய பூர்வார்த்தத்தில் ஒரு பிராஸம்குறைந்திருந்தாலும், பூர்ணசந்திரன்போன்ற முகமுள்ளவளே? சீக்கிரம் சுண்ணாம்பு கொண்டுவரப்படட்டும் என்ற காளிதாஸவாக்கியத்தில் வாக்கியாந்வயம் இருக்கிறது. தண்டியின் வாக்கியத்தில் र् என்ற பிராஸம் ஒன்று அதிகமாயினும், காதின்கோடிவரை நீண்ட நேத்திரமுடையவளே! ஸுவர்ண நிறமுள்ள வெற்றிலைகளை என்று வாக்கியம் பூர்த்தியாகாமல் கொண்டுவரப்படட்டும் என்ற காளிதாஸனுடைய பதத்தையே பற்றி நிற்கின்றது.

அதுபோல தீக்ஷிதாளின் வாக்கியத்தில்உள்ள சூரியகிரணங்களை மறைக்கும் விருக்ஷங்களோடு கூடின அரண்யம் இருக்கிறது என்பதிலேயே பெண் பாம்பால் தழுவப்பட்டு குஹையில் உறங்கும் ஆண்பாம்புகளையுடைய என்ற விசேஷணம் அன்வயிக்கின்றது. அதனால் அந்தவேசி, காளிதாஸனைக் கவியென்றும், தண்டியைப் பண்டிதன் என்றும் கருதினாள்.

ஸுமதீந்திரஸ்வாமிகளால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறகிரந்தங்களில் ஒன்றேனும் அச்சிட்டு வெளியிட்டதாகத் தெரியவில்லை.

38. விஷ்ணுவின் ஆலயத்தைச் சிவாலயமாக்கினது,

ஒரு சமயத்தில் நமது தீக்ஷிதாள் ஒரு கிராமத்தில் தங்கினபோது சிவாலயம் அங்கு இல்லாததால் விஷ்ணுவின் ஆலயத்திற்குச் சென்றனர். அங்கு சிலர் சுத்த சைவர். இவர் இங்கு வருவது தகுதியில்லை என்றனர். அப்போது அதையறிந்த தீக்ஷிதாள்

शान्तं पद्मासनस्थं शशधरमकुटं पञ्चवक्त्रं त्रिणेत्रं
शूलं वज्रं च खड्गं परशुमभयदं दक्षभागे वहन्तम् ।
नागं पाशं च घण्टां प्रलयहुतभुजं साङ्कुशं वामभागे
नानालङ्कारयुक्तं स्फटिकमणिनिभं पार्वतीशं नमामि ॥

என்று விஷ்ணுவை சிவமூர்த்தியாக தியானித்தார். அதன் உத்தக்ஷணமே அம்மூர்த்தி சிவபெருமானுடைய மூர்த்தியாகவே ஆய்விட்டது. உடனே அம்மூர்த்தியை ஆச்சர்யத்துடன் அங்கிருந்தயாவரும் கண்டு தர்சித்தார்கள். பின்பு வைஷ்ணவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி தீக்ஷிதாள்,

शान्ताकारं भुजगशयनं पद्मनाभं सुरेशं
विश्वाकारं गगनसदृशं मेघवर्णं शुभाङ्गम् ।
लक्ष्मीकान्तं कमलनयनं योगिभिर्ध्यानगम्यं
वन्दे विष्णुं भवभयहरं सर्वलोकैकनाथम् ॥

என்று விஷ்ணுமூர்த்தியாக தியானித்தார். பிறகு அம்மூர்த்தி முன்போல் விஷ்ணுமூர்த்தியாக ஆய்விட்டது.

பிறகு தீக்ஷிதாள்

पुरारौ च मुरारौ च न भेदः पारमार्थिकः ।
तथापि मामकी भक्तिः चन्द्रचूडे प्रधावति ॥

“புராரியிடமும், முராரியிடமும் வாஸ்தவமான பேதம் கிடையாது. ஆயினும் எனது பக்தியானது சந்த்ரசூடனிடத்தில் செல்கிறது” என்றார்கள்.

உடனே யாவரும் அவர்களை அவதாரபுருஷர் என்று உறுதி கொண்டு வணங்கினார்கள். இச்சரிதம் சந்திரிகை என்ற ஸம்ஸ்கிருத பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

39. ஈச்வரபக்தியின் மஹிமை.

ஒரு சமயம் தீக்ஷிதாள் பக்கத்துக் கிராமத்தில் நடந்தேறிய ஸோமயாகத்திற்கு அழைக்கப்பட்டு அக்கிராமத்தில் தனது மித்திரபணியான ஒரு பிராம்மணனுடைய வீட்டில் தங்கினார். அவர் மிகவும் ஏழை. தீக்ஷிதாளின் பூஜைக்கு அவர் மனையாளால் சோளத்தாள் ஆக்கப்பட்ட அன்னம் நிவேதனத்திற்கு வைக்கப்பட்டது. உடனே தீக்ஷிதாள்,

कालकूटविषं पीत्वा शक्तिर्जरयितुं यदि ।
तर्हि भक्ताहृतमिदं यावनालोदनं गिळ ॥

கருணைக்கடலே! "முன்பு தாங்கள்" காலகூடவிஷத்தைப் புசித்து அதை ஜீர்ணஞ் செய்யச் சக்திபெற்றது வாஸ்தவமானால், இப்போது பக்தியால் கொடுக்கப்பட்ட சோளான்னத்தைப் புசியும் என்றார். உடனே அது சம்பான்னமாக மாறிவிட்டது. யாவரும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். दृष्ट्वैव तृप्यन्ति என்றபடி தேவதைகள் பார்த்தே திருப்தியடைகிறார்கள், என்றதையும் பிரத்தியக்ஷமாகக்கண்டார்கள். சோளான்னத்தை சம்பான்னமாகக் கண்டதாலேயே दृष्ट्वैव तृप्यन्ति என்ற பிருஹதாரண்யக ச்ருதியும் அவர்களுக்கு நன்கு புலப்பட்டது.

பிறகு ஒரு சமயம் தீக்ஷிதாளை ஒரு ஸமயம் ஒரு அரவம் கடித்தது. தீக்ஷிதாள் சிவபெருமானை நினைத்துக்கொண்டு ஸ்துதிக்கவே அவ்விஷமேறவில்லை. விஷம் நீங்கி, ஸ்வஸ்தமானார். அந்த ஸ்தோத்திரத்தைப் பின் எழுதுகிறேன்.

40 ஆச்சாளுவுக்கு ஒரு கண் ஊனமானது.

ஒருசமயம் தீக்ஷிதாள் ஒருவரும் உள்ளே வரக்கூடாதுஎன்று ஆஞ்ஞைபிட்டு கதவைத் தாப்பாளிட்டுத் தியானத்திலிருக்கும்போது, பதிவிரதாமணியாயினும் முன்பு யோகஸமாதியில் ஆச்சர்யதர்சனம் பண்ணியிருப்பதால் ஏற்பட்ட அதிக ஆவலால், ஆஞ்ஞையை உல்லங்கனஞ் செய்து அக்கதவின் துவாரத்தால் ஒரு கண்ணால் தியானவைபவத்தைப் பார்க்கும்போது அங்குள்ள கோடி சூர்யப்பிரகாசமான ஒளி அக்கண்ணைக்குருடாக்கி விட்டது. பிறகு தீக்ஷிதாள் வெளியில் வந்து, எனது வாக்கியத்தை உல்லங்கனம் பண்ணினதால் ஏற்பட்ட இக்கண்ணின் ஊனம் நீக்க முடியாதது. பரமேச்வரரூபியாய் இருந்த எனதுஸ்வரூபம் இக்கண்ணால் பார்க்கத்தகாதது. இக்கண்ணின் ஊனத்தை அநுபவிக்க வேண்டியதுதான். இதனால் பாபம் நீங்கி உனக்குமோக்ஷம் ஏற்படும் என்று சமாதானஞ் செய்தார். (தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி

சென்னை ஆஸ்திகப் பிரசாரம்.

வைதிகமதத்தைப்பற்றி உபன்னியாஸம்.
(2—6—1929.)

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் ஸ்ரீமான், வி. ஜகதீசுவரசாஸ்திரிகளால் ஸநாதன தர்மப்ரசார ஸம்பந்தமாக சென்னை தம்புசெட்டித்தெரு 119-நெ. ஸ்ரீசங்கரமடத்தில் செய்யப்பட்ட உபன்யாஸத்தின் ஸாராம்சமாவது:—

பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் சபையை வணங்கி வைதிக மதத்தைப்பற்றிய உண்மை ரகஸ்யத்தை உரைக்கும் உபன்யாஸங்கள் தான் தற்போது உபயோகமானவை என்றும், இந்துமத தத்துவத்தைப் போலியாக உபதேசிக்கும் உபன்யாஸங்களை அடிக்கடிக் கேட்டுத்தான்நாம் கேட்டுவிட்டோமென்றும், அரசர்கள் மதத்தில் உதாஸீனர்களாய் இருக்கும் இக்காலத்தில் உண்மை வழியில் நடத்துவதற்காகவே குருபீடங்களேற்பட்டனவென்றும், மதங்கள் இவ்வுலகில் பல உளவாயினும் அவைகளைக் காட்டினும் நமது மதமே சிறந்ததென்பது வைதிகமதமென்னும் சொல்லாலேயே விளங்குமென்றும் மதகௌரவமனைத்தும் அம்மதத்தைப் புகட்டும் நூல்கள் வாயிலாகத்தான் ஏற்படவேண்டுமென்றும், மதத்திற்குப் பிரமாண பலம் பலமேயன்றி தனபலமும் ஜன ஸமூஹ பலமும் பலமன்று என்றும், அநேககோடி பவுன்களை மூலதனமாக வைத்து திரள் திரளாக ஜனக்கூட்டத்தைச் சேர்த்துவிட்டால் மதவிருத்தி ஏற்படாதென்றும், அத்தகைய மதங்கள் அநேகங் கோடி உற்பத்தியாய் நசித்துவிட்டனவென்றும், நமது வைதிகமதமோ அனேக ஆபத்துக்களினின்றும் தப்பித்து சில விடங்களிலாவது தற்போது பிரகாசிப்பது நமது மதம் ஸநாதனமென்பதற்கு அறிகுறியாகும் என்றும், யுகந்தோறும் நமது மதத்திற்கு ஆபத்துக்கள் அனேகம்உண்டாயினும் தற்போது நமக்கும் நம் பாரதநாட்டிற்கும் நேர்ந்திருக்கும் ஆபத்துக்கள் முன்னைவிட அதிகமென்பது சொல்லாமலே விளங்கும் என்றும், அதையறிந்தும் அவைகளினின்றும் தப்பிக்கும்படியான உண்மை மார்க்கத்தை அறிந்தோமில்லையென்றும், பல காரணங்களால் அறிந்தும்

அநுஷ்டிக்கமுடியாமல் தவிக்கின்றோம் என்றும், அநேகருக்கு மதம் தெய்வம் இதுபோன்ற விஷயங்கள்தெரியாமலிருக்கின்றன என்றும், மதத்தைச் சிறிதும் அறியாதவர்கள் மதத்தில் அபிமானம் வைப்பது சாத்தியமில்லையென்றும், ஆகவே மதத்தில் அபிமானமின்றி துவேஷமும் வலுத்துவிடுகின்றது என்றும், இதனால் நிஷ்களங்க வைதிகமதத்துவேஷிகளாகவும் நம்மவர்களானார்கள் என்றும், இம்மதத்துவேஷிகள் நமக்குள் இருக்கும் மதாபிமானிகளையும் கூட ரஹஸ்யமாகவும் கபடமாகவும் தமது மதத்தில் இழுத்துக்கொண்டு போகப்பாடுபடுகிறார்கள் என்றும் தற்காலத்திய மதத்துவேஷிகள் செய்யும் மதத்துவேஷ கார்யங்களை கவனித்தால் முற்காலத்தில் ஹிரண்யகசிபு, இராவணன் முதலிய அரக்கர்களாலும் இத்தகைய காரியம் செய்திருக்க முடியாதென்பது நிச்சயமென்றும், மஹமதியர்கள் கிறிஸ்துவர்கள் இவர்கள் மதத்திற்காக உடல், பொருள், ஆவி இவைகளைப் பறிகொடுக்கத் தயாராயிருப்பார்களென்றும், அத்தகைய பிடிவாதம் நம்மவர்களுக்குக் கொஞ்சங்கூட இல்லாமற்போனது. கெட்டகாலத்திற்கு அடையாளமாகுமென்றும், ஹிந்துக்களுக்கு மதமே ஜீவாதார இரத்தமாகுமென்றும்,இரத்தம் கெட்டுவிட்டால் வியாதிகள் பல உற்பத்தியாவதுபோல் மதம் கெட்டுவிட்டால் மனிதர்களும் வியாதியஸ்தர்களைப்போல் துர்ப்பலர்களாவார்கள் என்றும், இந்தியாவின் வறுமைக்கும் இந்தியஜனஸமூஹத்தின் கஷ்டநிஷ்டூரங்களுக்கும், மதத்தின் துர்த்தசையே காரணமாகுமென்றும்,நமது பாதகண்டம் க்ஷேமமடைவதற்கு மதத்தில்தான் நாம் பிரயத்தனிக்கவேண்டுமென்றும், நமது பாரதமாதா, மதமென்னும் தங்கக்கவசம் பூண்டிருப்பதாக சாஸ்திர சம்பிரதாயம் என்றும், ஜலமில்லாமல் மீன் ஜீவிக்காததுபோல் மதமில்லாமல் மானிடன் ஜீவிக்கான் என்றும், மதமென்பது ஆத்மோன்னதியையும் ஸகலக்ஷேமத்தையும் அடைந்து உய்யுமாறு ஏற்பட்ட காரியமென்றும், பிறந்தது முதல் இறக்கும்வரையிலெதாவதொரு காரியத்தைச் செய்துகொண்டேயிருப்பது மனிதர்களின் ஸ்வபாவம் என்றும்சொன்னார்·

(தொடரும்,)

வி. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

(சுதேசமித்திரன்)